பக்கங்கள்:09 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 14 செவ்வாய்க்கிழமை 28.06.2022 கதிர் 235

**இனி இது ரகசியம் அல்ல!**

பதவிக்கு வந்த நாள் முதல் மக்களுக்கு உண்மைகளைச் சொல்லாமல் மூடி மறைத்து, அதர்மம் பண்ணியதுதான் கோட்டா அரசின் சாதனை. எதிலும் உண்மைத் தன்மை இல்லை.

கோட்டாவும் அவரைச் சூழ இருந்தவர்கள் 2

# நாடு மிக விரைவில் முற்றாக முடங்கும்?

## எரிபொருள் கையிருப்பு அடி ஒட்டுக்கு!

இலங்கையில் தற்போது ஒரு நாளுக்குத் தேவையான அளவில் கூட எரிபொருள் இருப்பு இல்லையென தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கைப் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஆங்கில நாழிதல் ஒன்று இதுகுறித்த செய்தியினை வெளியிட்டுள்ளது. 2



# வவுனியா வேப்பங்குளத்தில் 3,000 லீற்றர் டீசல் மீட்பு!



வவுனியா, வேப்பங்குளம் பகுதியில் உள்ள பிரபல ஹாட்வெயார் நிறுவனம் ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த மூவாயிரம் லீற்றர் டீசல் விசேட சோதனை 2

# எரிபொருளை தருவித்து விநியோகிக்க முறையான திட்டம் தயாரிக்க உத்தரவு

## ஜனாதிபதி கோட்டா விடுத்தார்




எரிபொருள் விநியோகத்திற்காக உரிய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய பணத்தை திட்டத்துடன் செலுத்துவதற்கு மத்திய வங்கி ஆளுநர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நீண்டகாலமாக எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகித்து வரும் பிரதான நிறுவனங்களின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நேற்றுக் காலை கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் 2

# ரஷ்ய தூதுவருடன் கோட்டா சந்திப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மட்டெரிக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் 2



# அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே இனி எரிபொருள் விநியோகிக்க முடிவு

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் அத்தியாவசிய சேவைகளைப் பராமரிப்பதற்காக மாத்திரம் டீசல் மற்றும் பெற்றோலை விநியோகிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் அறிவிப்பதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்படி, துறைமுகங்கள், சுகாதாரத் துறை, அத்தியாவசிய உணவு 2

# பஸ் கட்டண உயர்வு; இன்று இறுதி முடிவு!

ஜூலை முதலாம் திகதி (வெள்ளிக்கிழமை) முதல் அமுல்படுத்தப்படவுள்ள பஸ் கட்டணங்கள் தொடர்பில் இன்று இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்புடன் பஸ் கட்டணமும் அதிகரிக்கப்பட வேண்டுமென பஸ் போக்குவரத்துச் சங்கங்கள் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தன.

இதன்படி இன்று போக்குவரத்து அமைச்சருடன் இடம்பெறவுள்ள கலந்துரையாடலின் பின்னர் பஸ் கட்டணத் திருத்தம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி நிலான் மிரண்டா தெரிவித்தார்.

# கோட்டாவுடன் அமெ. உயர்குழு பேச்சு



இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்ட்லிங் தலைமையிலான குழுவினர் நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங்கும் கலந்துகொண்டார்.

இதன்போது வீழ்ச்சியடைந்துள்ள 2

# இலங்கைக்கு உதவுவோம்!

## ரணிலிடம் அமெரிக்கக் குழு உறுதி



இலங்கையில் நிதி முகாமைத்துவத்துக்கான தொழில்நுட்ப உதவிகளை வழங்க அமெரிக்கா இணக்கம் தெரிவித்துள்ளது. 2

# மாந்திரீகரின் தலையைத் துண்டித்து நிலவளா கங்கையில் வீசிய இளைஞர்

## மனைவிக்கும் மகளுக்கும் வெட்டுக் காயங்கள்

மாந்திரீகர் ஒருவர் தலை துண்டித்துக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மாத்தறை – அக்குரஸ்ஸ, திப்போடுவ பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையின் தலையே அவரது வீட்டில் வைத்து துண்டிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவரின் மனைவியும் மகளும் பாரிய வெட்டுக்காயங்களுக் குள்ளாகி மாத்தறை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 29 வயது சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

சந்தேகநபர், உயிரிழந்தவரின் வீட்டுக்கு அருகிலுள்ள வீட்டில் வசித்து வந்துள்ளார் என்று ஆரம்பகட்ட 2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

எல்லோரும் மக்கள் காதில் பூச்சுற்றும் வேலையைத்தான் முன்னெடுத்தார்கள். அதைத்தான் இப்போதும் தொடர்கின்றனர். ஏதோ ரணிலின் இடையில் வந்தமையால் சில உண்மைகள் ஆங்காங்கே வெளிப்படுகின்றன. யதார்த்தமும் உரைக்கப்படுகின்றது.

கடந்த மூன்று மாதங்களாக ஒருவாறு மோடி கணக்கில் நாடு தப்பிப் பிழைத்தது. இந்தியா கண்ணை மூடிக்கொண்டு எரிபொருள் கப்பல்களை அனுப்பியமையால் விடயம் ஒருவாறு நகர்ந்தது.

இந்திய உதவியும் முற்றாகக் கரைந்து விட்டது. இனிக் கிட்டடியில் எரிபொருள் கப்பல் ஏதும் வரும் சாத்தியமே இல்லை. அதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் இன்னும் கருக்கட்டக் கூட இல்லை.

இப்போது அடுத்த மாதம் பத்தாம் திகதி வரை – அதாவது இரண்டு வாரங்களுக்கு – அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே எரிபொருள் விநியோகம், வேறு எதற்கும் இல்லை என்று அமைச்சரவையின் முடிவாக அரசின் தீர்மானம் அறிவிக்கப்பட்டுவிட்டது. இந்த நிலைமை இப்போதைக்கு இரண்டு வாரங்களுக்கு என்று கூறப்பட்டாலும், அதே நிலைமை இரண்டு மாதங்கள் தாண்டியும் நீடித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இந்தியா ஏதேனும் கண்திறந்து மேலும் எரிபொருளை வாரியிறைத்தாலே தவிர, எரிபொருள் கப்பல் ஏதும் இலங்கைப் பக்கம் தலை காட்டுவதற்கு இப்போதைக்குச் சாத்தியமே இல்லை என்பதுதான் நிலைமை. அப்படியானால் எரிபொருள் நிலையங்களில் இந்த 'டோக்கன்' விநியோகம், டோக்கன் ஏற்பாடு எல்லாம் எதற்காக செய்தார்கள்? காதில் பூ வைக்கும் வேலைதான். வரவே வராத எரிபொருளை வாங்குவதற்கு 'டோக்கன்' கொடுத்து மக்களை முட்டாளாக்கும் கைங்கரியம்தான் அரங்கேறுகின்றதா? நேற்று மாலை வரை வரிசையில் நின்று டோக்கன் பெற்றவர்களுக்கும் இனி இரண்டு வாரங்களுக்குப் பின்னரும் எரிபொருள் கிடைக்கும் உத்தரவாதமில்லை. டோக்கன்களை வைத்து பூஜை நடத்த வேண்டியதுதான்.

இந்தச் சீத்துவத்தில் நேற்று மத்திய வங்கி ஆளுநர், திறைசேரி, நிதியமைச்சு அதிகாரிகளை எல்லாம் அழைத்து எரிபொருள் கப்பல்களுக்கான டொலர்களை ஒதுக்குவது தொடர்பாக உத்தரவு போட்டிருக்கிறார் ஜனாதிபதி கோட்டாபய.

மந்திரத்தால் மாங்காய் பறிக்கும் வேலை அல்லது வெறுங்கை மூலம் முழம் போடும் வேலைதான் இது. எரிபொருள் கப்பல்களுக்குச் செலுத்துவதற்கு இல்லாத டொலரை மத்திய வங்கி ஆளுநரும் திறைசேரித் தலைவரும் எங்கிருந்து புரட்டிக் கொண்டு வருவார்கள்?

நாட்டுக்கு ஒரு பிரதமரை நியமித்து, அவரிடம் நிதியமைச்சையும் ஒப்படைத்துவிட்டு, அவர் இல்லாமல் நிதித்துறை தொடர்பான கலந்துரையாடல் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி, எரிபொருளுக்கு டொலர் ஒதுக்கீடு, எரிவாயுக்கு ஒதுக்கீடு என்று உத்தரவுகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார் கோட்டாபய.

அப்படி என்றால் அவர் ஓர் உத்தரவு, பின்னர் நிதியமைச்சர் என்ற கோதாவில் பிரதமர் ரணில் வேறு உத்தரவு என்று அரசியல் நிர்வாக கட்டமைப்பே தள்ளாட வேண்டியதுதான்.

கோட்டா பதவி விலகும் வரை நிலைமை சீரடைய வாய்ப்பில்லை. அவரோ தான் தோற்றுப் போன ஜனாதிபதியாக பதவியை விட்டு இறங்க மாட்டேன் என்கிறார். அவர் எப்போது வெற்றி பெற்ற ஜனாதிபதியாவது? அவர் எப்போது பதவி விலகுவது? எப்போது நாடு மீளுவது? தெரியவில்லை.

போகிற போக்கில் ஒரு லீற்றர் பெற்றோல் ஐயாயிரம் ரூபா என்ற நிலையில் கொண்டுபோய் நிறுத்தி விட்டுத்தான் அவர் பதவியிலிருந்து வெளியேறுவார் போல தோன்றுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் வாக்குகளும், நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையையும் கொடுத்த இலங்கை மக்களுக்கு, அந்த வரலாற்று தவறுக்காக அனுபவிக்க வேண்டிய பல விடயங்கள் இன்னும் இருக்கின்றன போலும். அவற்றை ஒப்பேற்றி முடித்து மக்களை அல்லல்பட வைத்துவிட்டுத்தான், கோட்டா நடையைக் கட்டுவார் எனத்தோன்றுகின்றது.

– மின்னல் –

## நாடு மிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதற்கமைய, நாட்டில் தற்போது ஆயிரத்து 100 தொன் பெற்றோல் மற்றும் 7 ஆயிரத்து 500 தொன் டீசல் மட்டுமே உள்ளன எனக் கூறப்படுகின்றது.

இலங்கை கடனைச் செலுத்தத் தவறியதன் காரணமாக சர்வதேச நிறுவனங்கள் இலங்கையை மோசமாக ஆவணப்படுத்தியுள்ளன எனவும், இலங்கைக்கு எரிபொருளை வழங்க சர்வதேச வங்கிகளின் உத்தரவாதத்தை அவை கோருகின்றன எனவும் கூறப்படுகிறது.

கடந்த ஒரு வாரமாக நாட்டிற்கு எரிபொருள் கப்பல்கள் எதுவும் வரவில்லை எனவும், விரைவில் எரிபொருள் கப்பல் வரவில்லையென்றால், பொதுப் போக்குவரத்து கூட தடைப்பட்டு நாடு முற்றாக முடங்கிவிடும் எனவும் அந்த நாளிதழ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது கையிருப்பில் உள்ள குறைந்தளவான எரிபொருள்கள் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகின்றன எனவும், பொதுமக்களுக்குத் தேவையான எரிபொருளை வழங்குவதற்கான டோக்கன் முறை பயனற்ற விடயம் எனவும், மின் உற்பத்தி நிலையங்களுக்கு தேவையான எரிபொருளை வழங்க முடியாததால் மின்வெட்டு நேரம் அதிகரிக்கலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## கோட்டாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கையின் பொருளாதார நிலைமை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பு குறித்து ருவிட்டரில் ஜூலி சுங், இலங்கையின் பொருளாதார நெருக்கடி குறித்து விவாதிக்க இது ஒரு சவாலான நேரம். இலங்கைக்கு வளமான, பாதுகாப்பான மற்றும் ஜனநாயக எதிர்காலத்தை அடைய உதவும் வகையில் நாங்கள் தொடர்ந்து உதவி மற்றும் நீண்டகாலப் பங்காளித்துவத்தை வழங்குகின்றோம் – என்று குறிப்பிட்டுள்ளார்.

## ரஷ்ய தூதுவருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

போது, தேயிலை ஏற்றுமதி, சுற்றுலா, எரிபொருள், நிலக்கரி, எரிவாயு, விமானப் போக்குவரத்து, கல்வி, வர்த்தகம் மற்றும் உரம் உள்ளிட்ட பல முக்கிய பொருளாதாரத் துறைகள் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

வலுவான அரச உறவுகள் மற்றும் இரு நாடுகளுக்கிடையிலான நட்புறவை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளின் போது ரஷ்யா வழங்கிய ஆதரவை பாராட்டினார்.

2022 ஆம் ஆண்டுடன் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் இராஜதந்திர உறவுகளை நிறுவி 65 ஆண்டுகள் நிறைவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இலங்கை வந்துள்ள அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் கெல்லி கெய்டர்லிங் தலைமையிலான குழுவினர் நேற்றுப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இலங்கை அரசுக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுகளுக்கு ஆதரவளிப்பதாக அமெரிக்க இராஜதந்திரக் குழு தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சுங்கும் கலந்துகொண்டார்.

மேலும், பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மற்றும் பிரதமரின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். சமரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## எரிபொருளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

அதுவரை தற்போதுள்ள நிதியை பயன்படுத்தி எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எரிபொருள் விநியோகத்தை சீரமைக்க மத்திய வங்கி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் இருந்து நிதி வழங்கவும், கடன் கடிதத்தின்படி எரிபொருள் கிடைக்காவிட்டால் குறிப்பிட்ட காலத்திற்குள் எரிபொருளைப் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட தாய் நிறுவனங்களுடன் கலந்துரையாடவும் தீர்மானிக்கப்பட்டது.

அடுத்த சில மாதங்களுக்கு எரிபொருள் விநியோகத்தை நிர்வகிப்பதற்கும் பராமரிப்பதற்கும் முறையான திட்டமொன்றை வகுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் நேரடியாக எரிபொருள் விநியோகிக்கும் தாய் நிறுவனங்கள், சர்வதேச வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களுடன் கலந்துரையாட வேண்டியதன் அவசியத்தை எரிபொருள் விநியோக முகவர்கள் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளனர்.

## வவுனியா வேப்பங்குள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நடவடிக்கையின் போது இன்று நேற்று மதியம் கைப்பற்றப்பட்டுள்ளதாக நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா விசேட பொலிஸ் பிரிவுக்கு கிடைத்த தகவலையடுத்து நெளுக்குளம் பொலிஸார் வவுனியா, மன்னார் வீதி, வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள பிரபல ஹாட்வெயார் நிறுவனம் ஒன்றினை சோதனை செய்தனர். இதன்போது அங்குள்ள களஞ்சியசாலைப் பகுதியில் 15 பெரல்களில் பதுக்கிவைக்கப்பட்டிருந்த 3000 லீற்றர் டீசல் கண்டு பிடிக்கப்பட்டது.

அந்த டீசல் நெளுக்குளம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. அதனை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஹாட்வெயாரின் களஞ்சியப் பகுதியில் கடமையாற்றும் 33 வயதுடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளின் பின் நீதிமன்றில் அவரை முற்படுத்த நடவடிக்கை எடுப்பர் எனத் தெரிவித்தனர்.

## மாந்திரீகரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, துண்டிக்கப்பட்ட தலையைச் சந்தேகநபர் எடுத்துச் சென்றுள்ள நிலையில் அதனை நில்வளா கங்கையில் வீசியிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

## மக்கள் முன்னணி எம்.பிக்கள் யாழ் அரச அதிபருடன் பேச்சு



எரிபொருளைப் பெறுவதில் பொதுமக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள்.

இதன்போது எரிபொருள் நிலையங்களில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்து, மக்கள் எரிபொருளை பெறுவதை இலகுபடுத்துவதற்காக தங்களால் இயன்றதைச் தாங்கள் செய்வார்கள் என அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

## அத்தியாவசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

விநியோகம், மற்றும் விவசாயப் பொருள்களின் போக்குவரத்து போன்ற அத்தியாவசிய சேவைகளைப் பேணுவதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் மற்றும் பெற்றோலை விநியோகிக்கும் என அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தும் அநேகமாக இடைநிறுத்தப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அதேபோல், எதிர்வரும் ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை குறுந் தூர பொதுப் போக்குவரத்தை இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் ஊடாக வழங்க எதிர்பார்த்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாடசாலைகளை நடத்துவது தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை பிரதானிகளுக்கு வழங்கியுள்ளதாக கல்வி அமைச்சரினால் அமைச்சரவைக்கு அறிவிக்கப்பட்டதாக அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, பொது போக்குவரத்து அதிகளவில் தேவைப்படாத கிராமப் புற பாடசாலைகளை நடத்திச் செல்ல முடியும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், சமையல் எரிவாயு மற்றும் எரிபொருளை தொடர்ச்சியாக விநியோகிப்பதற்காக பொறிமுறையானது ஜூலை மாதம் 10 ஆம் திகதிக்கு பின்னர் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



# சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 600 கோடி டொலர்பெற பிரதமர் முயற்சி!

## வஜிர அபேவர்த்தன கூறுகிறார்



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 600 கோடி டொலர்களை உதவியாகப் பெற்றுக்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருகின்றார்.

அதில் 500 கோடி டொலர்களை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் 100 கோடி டொலரை ரூபாவை பலப்படுத்த முதலீடு செய்யவும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

அத்துடன் ஆரம்பத்திலேயே டொலரைக் கட்டுப்படுத்தத் தவறியமையே பொருள்களின் விலை அதிகரிப்புக்குக் காரணமாகும். ரணில் விக்கிரமசிங்க அதற்கு பொறுப்பல்லர் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாட்டை நிர்வகிக்க வேண்டிய வழிவகைகளை ஐக்கிய தேசிய கட்சி கடந்த 2020 தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாக குறிப்பிட்டிருந்தது.

அதில் தெரிவிக்கப்பட்டிருந்த அனைத்து விடயங்களும் தற்போது இடம்பெற்று வருகின்றன. எமது கொள்கையை மக்களுக்கும் தெரிவித்திருந்தோம்.

நாடாளுமன்றத்துக்கும் அறிவித்திருந்தோம். ஆனால் மக்கள் நாட்டின் எதிர்காலம் தொடர்பாக சிந்திக்காமல், இனவாதம் மதவாதத்தை தூண்டும் விடயங்கள் அடங்கிய தேர்தல் கொள்கைகளுக்கே ஏமார்ந்தனர்.

2022 இல் இலங்கை 63 கோடி டொலர் கடன் செலுத்தவேண்டும் என 2021 வரவு செலவு திட்டத்தில் நாங்கள் தெரிவித்திருந்தோம். கடனை அடைப்பதற்குத் தேவையான வழிமுறைகளை நாங்கள் தெரிவித்திருந்தோம். என்றாலும் அரசாங்கம் 2022 ஏப்ரல் மாதம் 33 கோடி டொலர் கடன் செலுத்தி இருந்தது.

ஏனைய தொகையை வருட இறுதியில் செலுத்த வேண்டி இருந்தது. என்றாலும் இதுதொடர்பில் எந்தக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமல், நாடாளுமன்றத்துக்கும் அறிவிக்காமல், நாடு வங்குரோத்து என ஏப்ரல் மாதம் அறிவித்திருந்தது. இது அரசமைப்புக்கு முரணாகும்.

கடன் செலுத்துவதற்கு நிதி அமைச்சுக்கு முடியாவிட்டால், திறைசேரிக்கும் முடியாது என்றால் அதுதொடர்பில் நாடாளுமன்றத்துக்கு அறிவித்து, நாடாளுமன்றம் அவசர நிதி சபையாக செயற்பட்டு தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள அரசமைப்பின் 151 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை செய்யாமல் நாடு வங்குரோத்து என அறிவித்தது.

இந்நிலையிலேயே மே 9 நாட்டில் கலவரம் ஏற்பட்டு, பிரதமர் உட்பட அமைச்சரவை பதவி விலகியது. நாட்டின் நிர்வாகத்தைப் பொறுப்பேற்க யாரும் முன்வராத நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க அனுபவம் உள்ள தலைவர் என்ற வகையில் பிரதமர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டமை முதல் நாடு செலுத்தவேண்டிய 550 கோடி டொலர் கடனை எவ்வாறு செலுத்துவதென அமெரிக்கா, சீனா. ஜப்பான் உட்பட அனைத்து நாடுகளுடன் கலந்துரையாடி வருகின்றார். சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நாணய நிதியங்களுடன் கலந்துரையாடி வருகின்றார். நாடு எதிர்கொண்டுள்ள மோசமான வீழ்ச்சியில் இருந்து ஒரு வழிக்கு கொண்டு வரவே பிரதமர் முயற்சிக்கின்றார். இதனைத்தவிர வேறு வழியில்லை.

அத்துடன் ரணில் விக்கரமசிங்க பிரதமரான பின்னரும் பொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதாக அவரை விமர்சிக்கின்றனர். டொலரை கட்டுப்படுத்தினாலே விலை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த முடியும். இது ஆரம்பத்தில் விட்ட தவறு. அதனால் இதனை உடனடியாகச் செய்ய முடியாது.

அத்துடன் நாட்டின் பொருளாதாரத்தில் நூற்றுக்கு 37 வீதத்தை சாதாரண மற்றும் நடுத்தர மக்கள் அனுபவிப்பதுடன் 63வீதத்தை ஏனைய சாரார் அனுபவிக்கின்றனர் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

இந்த அசாதாரண நிலைமையை போக்கும் வகையில் வரவு, செலவு திட்டம் ஒன்றை அரசாங்கம் சமர்ப்பிக்க இருக்கின்றது.

அதற்காக சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 600 கோடி டொலர் உதவிகளை பெற்றுக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க முயற்சித்து வருகின்றார்.

அதில் 500 கோடி டொலர்களை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் 100 கோடி டொலரை ரூபாவை பலப்படுத்த முதலீடு செய்வதற்கும் எதிர்பார்க்கின்றார்.

ஏனெனில் நாட்டின் 550 கோடி டொலர் கடனை அடைப்பதற்கான வேலைத்திட்டத்தை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிக்க பிரதமர் உட்பட அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

அதனால் நாடு எதிர்கொண்டுள்ள இந்நிலையில் யாரும் குறுகிய அரசியல் லாபம் தேடாமல் நாட்டை மீட்டெடுக்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். – என்றார்.

# இலங்கை போக்குவரத்துச் சபையின் வவுனியா சாலையினர் பணிப்பகிஷ்கரிப்பு





இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலையினர் நேற்று (திங்கட்கிழமை) பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுத்தனர்.

வட மாகாணத்திலுள்ள ஏழு சாலைகளில் பணியாற்றும் சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் ஊழியர்கள் கடமைக்கு செல்வதற்கான பெற்றோலைப் பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

இதன் காரணமாக தமக்கான பெற்றோலை உரிய முறையில் பெற்றுத்தர வேண்டும் எனத் தெரிவித்து ஏழு சாலைகளைச் சேர்ந்த சாரதிகள், நடத்துநர்கள் மற்றும் ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் வவுனியா சாலை ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் காரணமாக வவுனியா சாலைக்குரிய பஸ்கள் கடமைக்கு செல்லாது இ.போ.ச வவுனியாசாலையில் தரித்து நிற்பதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இதேவேளை தமக்கான உரிய தீர்வைப் பெற்றுத்தரும் வரை இந்தப் பணிபகிஷ்கரிப்பு தொடரும் என சாலை ஊழியர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பணிபகிஷ்கரிப்பு காரணமாக பாடசாலை மாணவர்கள், அரச ஊழியர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகியுள்ளமை குறிப்பிட்டத்தக்கது.

# அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதிக்கு அனுமதியளிப்பு!

*கொழும்பு, ஜூன் 28*

*ஜூலை 01 முதல் அரிசி, சீனி, பருப்பு உள்ளிட்ட 10 அத்தியாவசியப் பொருள்களை திறந்த கணக்கு மூலம் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.*

*இதனை வர்த்தக அமைச்சு சனிக்கிழமை அறிவித்துள்ளது.*


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி

* **இரண்டாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020**
* **மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2020**

மேற்படி பரீட்சைகளினை 09.07.2022 (சனிக்கிழமை) தொடக்கம் 18.07.2022 (திங்கட்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளினையும் 07.07.2022 (வியாழக்கிழமை) தொடக்கம் 08.07.2022 (வெள்ளிக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு 021 – 222 – 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

**பதிவாளர்**
**27.06.2022**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## உஷாராக வேண்டிய வேளை

**பொருளாதார நெருக்கடி என்ற மோசமான இக்கட்டில் நாடு இப்போது சிக்கியிருந்தாலும், அதற்கு முந்தைய கொரோனாப் பேரிடர் என்ற பின்னடைவிலிருந்து ஓரளவு மீண்டு விட்டது.**

**அந்தப் பேரிடர் உலகின் ஏனைய நாடுகளைப் போல இலங்கையையும் பாடாய்ப்படுத்தியது என்பது உண்மைதான். இப்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடி இக்கட்டுகளுக்கு, கொரோனாப் பேரிடர் நலிவே பிரதான காரணம் என்று, இப்போதைய ஆட்சியாளர்கள் சமாதானம் – விளக்கம் – கூறித் தப்ப முயன்றாலும், அது ஏற்புடைய காரணம அல்ல என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மைதான்.**

**ஆனாலும், பொருளாதார நெருக்கடி இவ்வளவு விரைவாக நாட்டைப் பற்றிப் பீடிப்பதற்கு கொரோனாப் பேரிடர் நலிவும் ஒரு காரணம்தான் என்பதை நாம் முழுமையாக மறுக்கவும் முடியாது.**

**கொரோனாப் பேரிடரால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கும் சேர்த்து தடுப்பூசிகளைத் தயாரித்து, வழங்கி உதவிய இந்தியாவுடன் ஒப்பிடுகையில், கொரோனத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை எட்டியிருக்கின்றது என்பதும் மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.**

**தனக்குத் தேவையான தடுப்பூசிகளுடன், பல்வேறு உலக நாடுகளுக்கும் வழங்கக் கூடிய விதத்தில் தடுப்பூசிகளை பல நூறு கோடி டோஸ் அளவுகளில் தயாரித்துத் தள்ளியது இந்தியா. இலங்கைக்கும் கூட அதன் தடுப்பூசிகள் கிடைத்தன.**

**எனினும் தனது தடுப்பூசி ஏற்றல் திட்டத்தை இந்தியா இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்து விடவில்லை. அது அகன்ற, பாரதத்தேசம். ஓர் உபகண்டம். முழு மக்களுக்கும் உரியளவு எண்ணிக்கை டோஸ்களை செலுத்தி முடிப்பது என்பது இமாலய வேலை. அதை இன்னமும் முனைப்புடன் அந்த நாடு முன்னெடுத்து வருகின்றது.**

**இலங்கையைப் பொறுத்தவரை, தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்வதில் நமது ஆட்சிப் பீடம் ஆரம்பத்தில் மெத்தனப் போக்கில் நடந்து கொண்டது. வீண் கால தாமதங்களும், அதனால் பாதிப்புகளும் பெருமளவில் ஏற்பட்டன. உயிரிழப்பு எண்ணிக்கைகளும் எகிறின.**

**எனினும், பின்னர் சீனாவிடமிருந்தும் பிற வழிகளிலும் மிக விரைவாக – எதிர்பாராத வேகத்தில் – தடுப்பூசிகளை வாங்கிக் குவித்தது ஆட்சித் தலைமை. தடுப்பூசி செலுத்தும் வேகமும் குறிப்பிடத்தக்களவு வேகத்தில் முன்னெடுப்பட்டது.**

**அதனால் இப்போது, கொரோனாப் பேரிடர் நெருக்கடி நாட்டில் சற்றுத் தணிந்துள்ளது. அதனை ஒட்டி நாடு சற்று அசிரத்தையாக நடக்கும் சூழ்நிலையும் ஏற்பட்டுள்ளது.**

**இந்தச் சமயத்தில்தான் வீரியமுள்ள – வேகமாகப் பரவும் – தடுப்புத் தகைமையைச் சிதறடிக்கும் – புதிய கொரோனாத் திரிவுகள் பல நாடுகளில் பரவ ஆரம்பித்திருக்கின்றன என்ற செய்திகள் வெளியாகியிருக்கின்றன.**

**சர்வதேசப் போக்குவரத்துக்காக நாடு திறந்திருக்கையில் இத்தகைய தொற்றுகள் நமது நாட்டையும் சுலபமாகப் பீடித்து விடலாம்.**

**ஆகவே, மெத்தனப் போக்கை விடுத்து மீண்டும் உஷாரடைய வேண்டிய நிலைமை வந்திருப்பதாகவே தோன்றுகின்றது. தடுப்பூசிகளைப் பெறுவதிலிருந்து சமூகப் பாதுகாப்பு முன்னெச்சரிக்கை முன்னெடுப்பது வரை தீவிரமாகப் செயற்பட வேண்டிய வேளை வந்து விட்டது. உஷாராகுவோம்.**

## அரசாங்கத்தை திஸ்தீரனமாக அமைப்பதன் மூலமே சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளை பெறலாம்!

### இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் கூறுகிறார்

நாட்டின் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு சர்வ கட்சிகளை உள்ளடக்கிய ஸ்திர தன்மை கொண்ட அரசாங்கத்தை உருவாக்க வேண்டும்.

அதன் ஊடாக மாத்திரமே சர்வதேச நாடுகள் மற்றும் சர்வதேச நாணயத்தின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பிரதான எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கீர் மார்க்கார் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துக் கூறுகையில் –

ஆசிய கண்டத்தில் எந்தவொரு நாடும் எதிர்நோக்கி இல்லாத அளவுக்கு பொருளாதாரப் பிரச்சினையை இலங்கை எதிர்நோக்கியுள்ளது. நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் தள்ளப்பட்டுள்ளது.

விவசாயம் மற்றும் வரி கொள்கை தொடர்பான பொறுப்பற்ற தீர்மானங்களை எடுத்ததன் காரணமாக நாடு இன்று பாரியளவில் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அதன் காரணமாக மக்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்துள்ளார்கள். இந்த நிலைமை எப்போது பூதாகரமாக வெடிக்கும் என்பது தெரியாது நாளை பற்றி ஒரு நம்பிக்கை மக்களுக்கு இல்லாமல் போயுள்ளது.

தவறான பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள், பாரிய ஊழல் மோசடிகள் மற்றும் மனித உரிமைகளை மீறும் நடவடிக்கைகள் காரணமாக இன்று சர்வதேச நாடுகளுடன் மண்டியிட வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீண்ட கால நட்பைப் பேணும் ஜப்பான் போன்ற நாடுகள் இன்று விலகி நிற்கின்றன. மத்திய கிழக்கு நாடுகளும் உதவி செய்வதில் இருந்து விலகி இருக்கின்றன.

இந்நிலையில் தற்போது உள்ள அரசாங்கத்தின் மீது மக்களுக்கும் , சர்வதேச நாடுகளுக்கும் நம்பிக்கை இல்லாமல் போயுள்ளது. இனிமேல் சர்வதேச நாடுகளை ஏமாற்ற முடியாது.

தற்போது பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலையை இல்லாதொழித்து பொருளாதார ஸ்திரதன்மையைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வ கட்சியை உள்ளடக்கிய அரசாங்கத்தை அமைப்பதன் ஊடாக சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்று கொள்ள முடியும். சர்வதேச நாடுகளின் நம்பிக்கை கட்டியெழுப்பும் விதத்தில் செயற்பட்டால் ஒத்துழைப்புகளை இலகுவாகப் பெற முடியும்.

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்ப்பதும் நாட்டு மக்கள் விரும்புகின்ற ஸ்திர தன்மை கொண்ட அரசாங்கத்தையே .அதை விடுத்து ஊழல், இலஞ்சம் மற்றும் கொள்ளையடிக்கும் அரசாங்கத்தை அல்ல. ஸ்திர தன்மை அற்ற அரசுக்கு சர்வதேச உதவிகள் கிடைக்கப் போவதில்லை.

எதிர்காலத்தில் நாம் செல்ல வேண்டிய இலக்கு தொடர்பில் மக்களுக்கு சர்வதேச நாடுகளுக்கும் தெளிவுபடுத்த வேண்டும். – என்றார்.

## எரிபொருளுக்காகக் காத்திருந்தோரை மட்டக்களப்பில் மோதித்தள்ளியது பஸ்!

### ஐவர் காயம்

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு ஊறணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக வீதியில் காத்திருந்தவர்கள் மீது நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை பஸ் மோதியதில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளுக்காக ஞாயிற்றுக்கிழமை மாலையில் இருந்து தொடர்ந்து கொழும்பு மட்டக்களப்பு பிரதான வீதி ஓரத்தில் மக்கள் மோட்டார்சைக்கிள்களுடன் வரிசையில் காத்திருந்தனர்.

இந்நிலையில் சம்பவதினமான நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை 5 மணியளவில் ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றுகின்றவர்களை செங்கலடி பிரதேசத்தில் இருந்து ஏற்றிக் கொண்டு ஆரையம்பதியை நோக்கி பிரயாணித்த தனியார் பஸ் வீதி ஓரத்தில் எரிபொருளுக்காகக் காத்திருந்தவர்கள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் 5 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் மட்டு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

விபத்தை ஏற்படுத்திய பஸ் சாரதி பஸ்ஸை விட்டுவிட்டு அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார்.

இந்த சம்பவத்தில் 5 மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்துள்ளன. பஸ்ஸை பொலிஸார் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர். சாரதியை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்குவில் போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## படகு மூலம் தனுஷ்கோடிக்குச் சென்றுள்ள வயோதிப தம்பதி மயங்கிய நிலையில் மீட்பு!

இலங்கையில் இருந்து படகு மூலம் தனுஷ்கோடி சென்ற வயதான தம்பதியர் கடற்கரையில் மயங்கிக் கிடந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

இலங்கையில் ஏற்பட்ட கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரையிலும் 85 இற்கும் மேற்பட்டவர்கள் அகதிகளாகத் தமிழகத்துக்கு தஞ்சம் புகுந்துள்ளனர்.

இந்நிலையில் மன்னாரில் இருந்து படகு மூலம் வயதான தம்பதியர் 2 பேர் நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை ராமேஸ்வரம் அருகே உள்ள தனுஷ்கோடி கடற்கரையில் வந்து இறங்கினர்.

இவர்கள் இருவரும் மயக்க நிலையில் கடற்கரையில் விழுந்து இருந்த நிலையில் அங்கு வந்த கடலோர பொலிஸார், அவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இவர்களுக்கு மருத்துவமனையில் சிகிச்சை இடம்பெற்றுவரும் நிலையில் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசா ரணை நடத்தி வருகின்றனர்.

## சரக்கு ஏற்றுமதி வருவாய் 5 மாதத்தில் 50 லட்சம் டொலர்

இந்த வருடத்தில் முதல் 5 மாதத்தில் சரக்கு ஏற்றுமதி வருவாய் 50 லட்சம் டொலராகப் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதனடிப்படையில், 2022 மே மாதம் வரையில் சரக்கு ஏற்றுமதி வருவாய் முந்தைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 9.9 வீதம் அதிகரித்துள்ளது.

# ஜி7 மாநாட்டில் இந்தியாவுக்கு அழுத்தம் வர வாய்ப்புண்டா?

பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமையன்று பிரிக்ஸ் அமைப்பின் உச்சி மாநாட்டில் வீடியோ கொன்பிரன்ஸிங் மூலம் பங்கேற்றார். இதில் சீன அதிபர் ஷி ஜின்பிங், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் நரேந்திர மோடி ஜி –7 மாநாட்டில் பங்கேற்பதற்காக நேற்று முன்தினம் (ஞாயிற்றுக்கிழமை) ஜேர்மனி சென்றுள்ளார். ஜி –7 அமைப்பில் உறுப்பினராக இந்தியா இல்லை. ஆனால் இந்த மாநாட்டில் சிறப்பு அழைப்பின் பெயரில் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்றுள்ளார்.

உக்ரேனில் போர் நடந்து கொண்டிருக்கும் நிலையில், சர்வதேச அமைப்புகளின் இத்தகைய மாநாடுகள் நடைபெறுகின்றன. அரசியல் ரீதியாகவும், ராஜரீக அடிப்படையிலும் உலகம் பிளவுபட்டு இருப்பது போன்ற சூழல் நிலவுகிறது.

பிரிக்ஸ் மாநாட்டில், சீன அதிபர் ஷி ஜின்பிங் நாடுகள் குழுவாக செயல்படுவதை குறிப்பிட்டு பேசினார். அவர் நேரடியாக எந்த பெயர்களையும் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் நேட்டோ போன்ற ராணுவ கூட்டமைப்பு மற்றும் குவாட் போன்ற அமைப்புகள் பற்றி பேசுகிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது.

இந்தியா நேட்டோவில் அங்கம் வகிக்கவில்லை. ஆனால் குவாட் அமைப்பின் முக்கிய உறுப்பினராக இந்தியா உள்ளது.

பிரிக்ஸ் மாநாட்டில், ஷி ஜின்பிங் மேற்கத்திய நாடுகளையும் அவற்றின் குழுக்களையும் கடுமையாக தாக்கிப் பேசினார். ஆனால், பிரதமர் நரேந்திர மோடி பேசியபோது, அவர் அதிகம் பேசவில்லை. அவர் உக்ரேன் போர் பற்றி பேசவில்லை. பிரிக்ஸ் அமைப்பின் கூட்டறிக்கையில் கூட உக்ரேன் போர் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், நேட்டோ மற்றும் குவாட் ஆகியவற்றை குறிப்பிட்டு பேசியதைத் தவிர, ஷி ஜின்பிங் ரஷ்யாவுக்கு ஒருதலைப்பட்ச பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன எனக் கூறி, அந்நாட்டிற்கு ஆதரவாக குரல் எழுப்பினார். அதே சமயம், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் பொருளாதார தடைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

பிரிக்ஸ் உச்சி மாநாட்டில், இந்தியாவை குறிவைத்து சீன அதிபர் ஷி ஜின்பிங் பேசியதாக நம்பப்படுகிறது.




தற்போது ஜி –7 மாநாட்டிற்கு பிரதமர் நரேந்திர மோடி செல்வதால், அங்குள்ள மேற்கத்திய நாடுகளின் தூதரக அழுத்தத்தை அவர் சந்திக்க நேரிடலாம் என்ற கருத்தும் எழுந்துள்ளது.

உலகம் மிகவும் கடினமாக காலகட்டத்தில் உள்ள நிலையில், இந்தியா தனது வெளியுறவுக் கொள்கையை தெளிவாகக் கடைப்பிடிக்கிறது.

இந்தியா ஒருபுறம் சீனா மற்றும் ரஷ்யாவுடன் கூட்டு வைத்துள்ள அதே சமயத்தில், மேற்கத்திய நாடுகள், ஆசிய நாடுகள் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடனும் நல்லுறவை கொண்டுள்ளது.

இந்தியாவின் புதிய கூட்டணி, குவாட் அமைப்பாகும். இது இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் நாடுகளின் பாதுகாப்பு ஒத்துழைப்புக்காக உள்ளது.

### இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்?

மனோகர் பாரிக்கர் இன்ஸ்டிடியூட் பார் டிபென்ஸ் ஸ்டடீஸ் அண்ட் அனாலிசிஸ் என்ற கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த ஆய்வாளரும் சர்வதேச விவகார நிபுணருமான ஸ்வஸ்தி ராவ், இந்தியா தனது அனைத்து வழிகளையும் திறந்து வைத்திருப்பது அவசியம் என்று கூறுகிறார்.

மேலும் அவர் கூறுகையில், இந்தியா போன்ற நடுத்தர அளவிலான வலிமை கொண்ட நாடு, அதன் அனைத்து வழிகளையும தொடர்ந்து திறந்து வைத்திருக்க வேண்டும். இந்தியாவின் ராஜரீக மற்றும் மூலோபாயம், உத்திமுறை தன்னாட்சியை அடிப்படையாகக் கொண்டது. முன்பு இது அணிசேரா என்று அழைக்கப்பட்டது. இந்தியா எதிலும் சேர விரும்பவில்லை என்பதே




இதன் அர்த்தம். இந்தியா தனது தேசிய நலன்களை முதன்மையாக கொண்டு, அதன் உத்திமுறை சுயாட்சியைப் பாதுகாக்க வேண்டும்.

கேட்வே ஹவுஸ் ஆய்வு கழகத்தை சேர்ந்த இந்தியாவின் முன்னாள் தூதுவரும், பல நாடுகளில் பணிபுரிந்த அனுபவமும் கொண்டவரான ராஜீவ் பாட்டியா, இந்தியா தனது நலன்களை முதன்மைப்படுத்தும் கொள்கையைப் பின்பற்றுகிறது என்று கருதுகிறார்.

இது குறித்து பாட்டியா கூறும்போது, கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை நன்றாக உள்ளது. இப்போது இந்தியா தமது தோழமை நாடு என்பதை மேற்கத்திய நாடுகள் அறிந்து கொண்டாலும், ஒரு கட்டத்தைத் தாண்டி இந்தியாவை அடக்க முடியாது என்பதையும் புரிந்துகொண்டிருக்கின்றன.

மறுபுறம் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான எல்லைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாத வரை, மற்ற துறைகளில் அதன் உறவுகள் வலுப்பெறாது என்பதில் சீனாவுக்கும் தெளிவாகியுள்ளது. இந்தியா – ரஷ்யா இடையிலான உறவும் வலுவாக உள்ளது என்று தெளிவாக கூறலாம். ஆனால் ரஷ்யா எது செய்தாலும், அதை இந்தியா ஆதரிக்கும் என்று அர்த்தம் இல்லை. எவ்வளவு உள்நாட்டு மற்றும் சர்வதேச பிரச்சினைகள் இருந்தாலும், இன்று இந்தியா வெளியுறவுக் கொள்கையை மிகவும் புத்திசாலித்தனமாக கையாண்டு வருகிறது. என்கிறார்.

### இந்தியா ஏன் பிரிக்ஸ் அமைப்பில் உள்ளது?

பிரிக்ஸ் அமைப்பில் இருப்பதால், இந்தியாவுக்கு எந்த பிரத்தியேக நன்மையும் இல்லை. ஏனெனில், சீனாவாக இருந்தாலும், அதற்கு பெரிய பொருளாதார சக்தி எதுவும் இல்லை. இதற்கு அதிக ராஜரீக பலமும் இல்லை.

ரஷ்யா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகள் கொண்ட ஓர் அமைப்பில், அமெரிக்காவுடன் உறவு வைத்திருக்கும் நாடுகளோ அல்லது ஜனநாயக நாடுகளோ



எப்போதும் சமநிலையற்றதன்மையில் இருக்கும். இப்போது கேள்வி என்னவென்றால் இந்தியா ஏன் பிரிக்ஸ் அமைப்பில் உள்ளது என்பதுதான்.

அதற்கான காரணத்தை விளக்கும் ஸ்வஸ்தி ராவ், பிரிக்ஸ் அமைப்பு என்பது வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தை அடிப்படையாக கொண்ட அமைப்பாக இருப்பது முதல் காரணம். எதிர்காலத்தில் அவை இன்னும் பெரியதாக உருவாகக்கூடும். அத்தகைய சூழ்நிலையில், இந்தியா எந்த வாய்ப்பையும் விட்டு வைக்க விரும்பவில்லை.

இதன் மூலம், உலகளாவிய தெற்கில் (பொருளாதார ரீதியாக வளர்ந்து வரும் நாடுகள்) நாம் நமது இடத்தை தக்க வைத்துக் கொள்கிறோம். இதில் லத்தீன் அமெரிக்கா, ஆபிரிக்கா மற்றும் ஆசியா ஆகியவற்றின்



பொருளாதாரங்களும் அடங்கும்.

நாடுகளிடையிலான நமது எல்லையளவை தக்க வைக்க ஒரு சிறந்த வழியாக பிரிக்ஸ் அமைப்பு இருக்கும். உலகில் டொலரின் பயன்பாட்டை நிறுத்துதல், இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகள் அதற்கு இணையான கட்டண முறைகளை உருவாக்க 'ஸ்விப்ட்' வங்கியைத்தவிர, தங்கள் சொந்த வங்கி அமைப்புகளை உருவாக்குகின்றன.

அதே நேரத்தில், பிரிக்ஸ் அமைப்பு என்பது ரஷ்யாவும் சீனாவும் இருக்கும் ஒரு தளமாகும். அத்தகைய சூழ்நிலையில் அதன் வெளியுறவுக் கொள்கையில் சமநிலையைக் காக்க இந்தியாவுக்கு அது வாய்ப்பாக இருக்கும்.

பிரிக்ஸ் அமைப்புக்கு அளிக்கப்படும் முக்கியத்து–வம் இப்போது இந்தியாவுக்கு குறைந்துவிட்டது என்றும் ராஜீவ் பாட்டியா கருதுகிறார். இதுபற்றி பாட்டியா கூறுகையில், இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையிலான உறவு இன்னும் கடினமாக உள்ளது. அத்தகைய சூழ்நிலையில், பிரதமர் நரேந்திர மோடி பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்று இருக்கலாம். ஆனால் அங்கு மிக குறைவாகவே பேசினார். இந்த சமயத்தில், பிரிக்ஸ் அமைப்பின் மீதான இந்தியாவின் ஆர்வம் முன்பை விட குறைந்து விட்டது, என்கிறார்.

### இந்தியா ஏன் குவாட் அமைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கிறது?

குவாட் அமைப்பு என்பது அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய அமைப்பாகும். குவாட் அமைப்பின் பொருளாதார, அரசியல் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அதிகம் முக்கியத்துவம் அளிக்கும். ஏனெனில், இதில் இந்தியாவுடன் இருக்கும் நாடுகளுக்குப் பொருளாதார பலம் அதிகமாக உள்ளது. உலகின் பொருளாதாரத்தில் வலுவான நாடுகளான ஜப்பானும் அமெரிக்காவும் உள்ளன.

ஆஸ்திரேலியா தாமாக பொருளாதாரத்தில் வலுவாக உள்ள நாடு. அது சீனாவுடன் நேரடியாகப் போட்டியிடுகிறது.

இதுபற்றி ஸ்வஸ்தி ராவ் கூறுகையில் பிரிக்ஸ் அமைப்புடன் இணைவதால் இந்தியாவுக்கு பெரிய நன்மை இல்லை. ஆனால் அப்படி இணையாவிட்டால், இந்தியாவுக்குதான் இழப்பு அதிகமாக இருக்கும். அதேசமயம், குவாட் அமைப்பு இந்தியாவுக்கு மிகவும் பயனுள்ள அமைப்பாகும். அத்தகைய சூழ்நிலையில், இந்தியா இப்போது குவாட் அமைப்புக்கு முன்னுரிமை அளிக்கிறது. என்கிறார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

# கோட்டா அரசு ஆட்சிக்குவர ஒத்துழைத்த சாபத்தைத் தற்போது அனுபவிக்கின்றோம்!

## முருந்தெட்டுவே ஆனந்த தேரர் வேதனை

ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கியதன் சாபத்தை தற்போது எதிர்கொள்கிறோம்.

பிற நாடுகளிடம் யாசகம் பெற்றாவது ஜனாதிபதி பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும். இல்லாவிடின் பதவி விலக வேண்டும்.

யார் ஜனாதிபதி, யார் பிரதமர் என்பது எமக்கு முக்கியமல்ல, மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும் என அபயராம விகாரையின் விகாராதிபதி முருந்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார்.

அபயராமவிகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

சுதந்திரத்துக்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கை மக்கள் என்றும் இல்லாதவாறு மிக மோசமான அவல நிலையைத் தற்போது எதிர்கொண்டுள்ளார்கள்.

பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. ஆடம்பர வாழ்க்கையை மக்கள் எதிர்பார்த்தார்கள்.

ஆடம்பர வாழ்க்கையல்ல தற்போது ஒருவேளை உணவைப் பெற்றுக்கொள்வது கூட பெரும் போராட்டமாக உள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு ஒத்துழைப்பு வழங்கினோம் என்பது உண்மை,அதனை மறுக்கவில்லை. அதன் சாபத்தை தற்போது எதிர்கொள்கிறோம்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நிர்வாகம் தொடர்பில் இதுவரை நாம் எதனையும் குறிப்பிடவில்லை. தற்போது குறிப்பிடுவதற்கான காலம் உதயமாகியுள்ளது. ஜனாதிபதியால் அரச நிர்வாகத்தை சிறந்த முறையில் முன்கொண்டு செல்ல முடியாது என்பது உறுதியாகி விட்டது.

இலங்கை மக்கள் உணவிற்காகப் போராடும் நிலையும், பெற்ற பிள்ளைகளுக்கு உணவளிக்க முடியாத நிலையில் பிள்ளையை தாய் ஆற்றில் எறியும் நிலைமையும் இலங்கை வரலாற்றில் இதுவரை தோற்றம் பெறவில்லை. இன்று செல்வந்தர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள், ஏழ்மையில் உள்ளவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஜனாதிபதி பிற நாடுகளிடம் யாசகம் பெற்றாவது நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டும் ஏனெனில் குறுகிய காலத்தில் பொருளாதாரத்தை சீரழித்தவர்கள் அதற்கான பிரதிபலனைப் பெற வேண்டும்.



மிகவும் மனவேதனையுடன் உள்ளோம். நாட்டின் தற்போதைய நிலைமைக்கு தீர்வு காணாவிடின் நாட்டின் எதிர்காலம் முழுமையாக இல்லாதொழியும்.

பாரிய எதிர்பார்ப்பிற்கு மக்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்தார்கள். மக்களின் எதிர்பார்ப்பு முழுமையாக இல்லாமல் போயுள்ளது. பிரச்சினைகளுக்கு முடிந்தால் ஜனாதிபதி தீர்வு காண வேண்டும் இல்லாவிடின் பதவி விலக வேண்டும்.

தற்போதைய நிலையில் யார் ஜனாதிபதி, யார் பிரதமர் என்பது எமக்கு முக்கியமல்ல நாட்டு மக்கள் நிம்மதியாக வாழ வேண்டும். மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு அவசியம். - என்றார்.

# ஜி7 மாநாட்டில் ...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் மூலோபாய நோக்கங்களுக்கு குவாட் முக்கியமானது என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இந்த அமைப்பின் மூலம் இந்தியாவும் தனது கடற்படை பாதுகாப்பை பலப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்தோ – பசுபிக் பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்து வரும் செல்வாக்கிற்கு பதிலடி கொடுக்க இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில், இந்தியா மேற்கத்திய நாடுகளின் பக்கம் சாய்வதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

ராஜீவ் பாட்டியா கூறும்போது, குவாட் அமைப்பில் இந்தியாவுக்கும் முக்கியப் பங்கு உண்டு. ஒரு புதிய அமைப்பு உருவாகிய நிலையில், இந்திய – பசுபிக் பொருளாதாரக் கட்டமைப்பில் இந்தியா முன்னணியில் உள்ளது. இவை அனைத்திலும் சீனா மற்றும் ரஷ்யாவுடனான இந்தியாவின் உறவு சற்றே கடினமாகிவிட்டது என்று தெளிவாகிறது. அதே சமயத்தில், மேற்கத்திய நாடுகளுடனான இந்தியாவின் உறவு வலுவாக உள்ளது.

**ஜி - 7 மாநாட்டில் ரஷ்யாவை விமர்சிக்க மோடிக்கு அழுத்தமா?**

ஜி – 7 என்பது உலகின் பொருளாதாரம் அடிப்படையில் மிகவும் வளர்ந்த நாடுகளைக் கொண்டுள்ள அமைப்பாகும். இதில் அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, கனடா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவை உள்ளன.

முன்பு, ரஷ்யா அதன் உறுப்பினராக இருந்தது. ஆனால் கிரிமியா மீது ரஷ்யா படையெடுப்பிற்குப் பிறகு, ரஷ்யா அதிலிருந்து நீக்கப்பட்டது. இதில் சீனாவால்



...தியாவும், தென்னாப்பிரிக்காவுக்கும்
...மைப்பின் வளரும் நாடான இந்தோ
...க்கப்பட்டுள்ளது. இந்த நாடுகளை
...ன. ஏனெனில் இந்த நாடுகளை ஈடு
...ன்னணியிலும், இந்தோ – பசுபிக்
...நாடுகள் உலகளவில் தெற்கு நோக்கி
...மாற்றம், தடுப்பூசி ராஜரீகம் குறித்தும்
...த்துவம் கொடுத்து வருகின்றன.
...மர்சிக்காவிட்டாலும், பகிரப்பட்ட ஓர்
...ள் என்று மேற்கத்திய நாடுகள் இந்தி

...ருக்குமா என்பது குறித்து, பாட்டியா
...ம் அல்லது இல்லாமல் போகலாம்.
...ாகத் தெரியும் என்று நம்பிக்கையுடன் கூறலாம். உக்ரேன் குறித்து இந்தியாவின் நிலைப்பாடு என்பது புதிதல்ல.

பனிப்போர் முடிவுக்கு வந்த பிறகு அமெரிக்கா மற்றும் மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை சரியாக கையாளவில்லை என்பதுதான் புதிது. அதுதான் இன்றைய நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

இந்தியா இதில் ஆக்கப்பூர்வமாக செயல்பட முயற்சிக்கிறது. போரினால் எந்தப் பிரச்சினையும் தீர்க்கப்படாது என்பது இந்தியாவின் நிலைப்பாடு. அது ராஜரீக முறையில்தான் தீர்க்க முடியும் என்று நினைக்கிறது. இத்தகைய அழுத்தம் இந்திய அரசுக்கு எப்போதெல்லாம் எழுகிறதோ, அப்போதெல்லாம் போரை விட்டு விலகி ராஜரீக பாதையில் செல்லுங்கள் என்று இந்திய அரசு கூறும். இத்தகைய சூழ்நிலையில், இந்தியப் பிரதமருக்கு எந்த அழுத்தமும் வருவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. அழுத்தங்களுக்கு அடிபணியும் பேச்சுக்கே இடமில்லை, என்கிறார்.

மறுபுறம், உக்ரேன் மீதான இந்தியாவின் நிலைப்பாடு சார்பற்றதாக இருக்கும் என்று ஸ்வஸ்தி ராவ் நம்புகிறார். அவர், உக்ரேனைப் பொறுத்தவரை இந்தியாவின் தரப்பு தொடக்கம் முதலே சார்பற்றதாக இருந்துள்ளது. இனியும் அப்படித்தான் இருக்கும். இந்த நிலைப்பாடு காரணமாக, இந்தியா பிரிக்ஸ் அமைப்பில் உள்ளது; குவாட் அமைப்பில் உள்ளது; அது ஜி – 7 மாநாட்டிற்கு அழைக்கப்படுகிறது. மேலும் பிரதமர் நரேந்திர மோடி மற்ற சர்வதேச மாநாடுகளுக்கும் செல்கிறார்.

**(நன்றி: பி.பி.ஸி. தமிழ்)**

# கொள்கலன் போக்குவரத்து கட்டணங்களும் அதிகரிப்பு!

கொழும்பு, ஜூன் 28

கொள்கலன் போக்குவரத்துக்கான கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாக அகில இலங்கை கொள்கலன் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் 10 சத வீதத்தால் போக்குவரத்து கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக அந்தச் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 64 ஆயிரம் லீற்றருக்கும் அதிகமான எரிபொருள் பதுக்கி வைக்கப்பட்டதிலிருந்து மீட்கப்பட்டது

## பொலிஸ் பேச்சாளர் தகவல்



நாட்டின் பல பகுதிகளிலும் அண்மைக் காலமாக எரிபொருள் பதுக்கல் தொடர்பில் பொலிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் சுமார் 64 ஆயிரம் லீற்றருக்கும் அதிக பெற்றோல், டீசல் மற்றும் மண்ணெண்ணெய் என்பன மீட்கப்பட்டுள்ளதோடு, 600 இற்கும் மேற்பட்ட சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலுள்ள எரிபொருள் தாங்கிகளை திறந்து காண்பிக்குமாறு பொதுமக்களால் பொலிஸார் வலியுறுத்தப்படுகின்றனர் எனவும், அனைவரதும் பாதுகாப்பைக் கருதி அவ்வாறான செயற்பாடுகளில் தலையிட வேண்டாம் என்றும் பொலிஸ் தலைமையகத்தால் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

எரிபொருள் பதுக்கல் தொடர்பில் 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை வரை 670 சுற்றிவளைப்புக்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் போது 675 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 21 ஆயிரத்து 636 லீற்றர் பெற்றோல், 33 ஆயிரத்து 462 லீற்றர் டீசல், 11 ஆயிரத்து 100 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. சட்ட விரோதமாக எரிபொருள்களைப் பதுக்கும் இவ்வாறான சந்தேகநபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே பொலிஸ் உத்தியோகத்தர்கள் எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே, அவர்களுடன் அநாவசியமாக மோதல்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என்று பொது மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம். பொலிஸாருடன் பொது மக்கள் முரண்படும் போது தேவையேற்படின் உயர் பொலிஸ் உத்தியோகத்தரின் ஆலோசனைக்கமைய மேலதிக பொலிஸாரை கடமையில் இணைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

அத்தோடு முரண்பாடுகளின் போது அவற்றை காணொலியாக பதிவு செய்து கொள்வதற்கும், தேவையேற்படின் ஏனைய சட்ட நடவடிக்கைகளின் போது அவற்றைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அத்தோடு எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலுள்ள தாங்கிகளை திறந்து காண்பிக்குமாறு பொதுமக்கள், பொலிஸாரை வலியுறுத்துகின்றனர். அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்று பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு பொலிஸ் தலைமையகத்தால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 70 சதவீத எரிபொருள் நிரப்பு நிலையங்களை மூட நடவடிக்கை எரிபொருள் நிரப்பும் நிலைய உரிமையாளர்கள் சங்கம் அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 28

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடியைக் கருத்திற் கொண்டு 70 சதவீதமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் டபிள்யூ. எஸ்.பெர்னாண்டோ இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

30 நாள்களுக்கு முன்னர் முற்பதிவு செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரையிலும் போதுமானளவு எரிபொருள் கிடைக்கப் பெறவில்லை. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கப் பெறாமையின் காரணமாக நாம் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பாதுகாப்பிற்காக பொலிஸாரை மாத்திரம் கடமைகளில் ஈடுபடுத்துவது போதுமானதல்ல. எனவே இராணுவத்தினரையும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோருகின்றோம். – என்றார்.

## மட்டு. மாவடிவேம்பில் பதுக்கிவைத்த டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மீட்பு!

மட்டக்களப்பு, ஜூன் 28

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள மாவடிவேம்பு பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றுக்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல், 258 லீற்றர் மண்ணெண்ணெயை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதேவேளை, ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

குற்றவிசாரணைப்பிரிவுக்குக்கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் ஆலோசனைக்கமைய குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி. பண்டார தலைமையிலான பொலிஸார் சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மேற்படி பிரதேசத்தில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகிலுள்ள கட்டடத்தை முற்றுகையிட்டனர்.

இதன் போது பரல்களில் நிரப்பி வைக்கப்பட்டிருந்த 550 லீற்றர் டீசல், 258 லீற்றர் மண்ணெண்ணெயை மீட்டதுடன் ஒருவரை கைது செய்து சந்திவெளி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மேலதிக கொடுப்பனவு இன்மை மருத்துவத் துறையும் பாதிப்பு!

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ள முயற்சித்தமை, வைத்தியர்களுக்கான மேலதிக கொடுப்பனவு கிடைக்கப்பெறாமை மற்றும் மருந்துகளுக்கான பற்றாக்குறை என்பவற்றால் மருத்துவர் துறை பல்வேறு பாதிப்புக்களை எதிர்கொள்வதாக மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடக சந்திப்பொன்று நேற்று (திங்கட்கிழமை) பகல் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது வைத்தியர்களுக்கு வழங்க வேண்டிய மேலதிக நேர கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படாத நிலை காணப்படுகின்றது. அதேநேரம் வைத்தியசாலைகளில் முக்கியமான மருந்துகளுக்கான பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனால் மருத்துவத்துறை பாரிய சவாலை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்காக எடுத்த முயற்சிகளின் போது பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதுடன் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மித்தெனிய துப்பாக்கி சூடு ஒருவர் கைதானியுள்ளார்!

எம்பிலிப்பிட்டிய, மித்தெனிய பிரதேசத்தில் நபர் ஒருவரை சுட்டுக் கொன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினரின் சிறப்பு நடவடிக்கைப் பிரிவினரால் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மித்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

46 வயதுடைய நபர் ஒருரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

## பெற்றோல் வழங்கவேண்டும் எனக் கோரி பருத்தித்துறை சாலை ஊழியர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 28

யாழ்ப்பாணம் பருத்தித்துறை சாலை ஊழியர்கள் தமக்கு பெற்றோல் வழங்க வேண்டும் என கோரி நேற்று அதிகாலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மக்கள் போக்குவரத்தில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வடமராட்சி தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தமது சேவையை அதிகரித்துள்ளது.

குறிப்பாக நாளாந்தம் 15 நிமிடத்துக்கு ஒருதடவை இடம்பெற்ற சேவையை நேற்று அதிகாலை முதல் 10 நிமிடத்துக்கு ஒருதடவை சேவையை நடத்திக் கொண்டிருக்கின்றது.



## 36 பேருக்கு ஞாயிற்றுக்கிழமை 4 ஆவது பூஸ்டர் டோஸ் ஊசி!

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாத்திரம் இலங்கையில் கொவிசீல்ட், சினோபார்ம், ஸ்புட்னிக் வி, பைசர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகள் வழங்கப்பட்ட விவரங்கள் வருமாறு:

கொவிசீல்ட் முதலாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை

கொவிசீல்ட் இரண்டாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை

சினோபார்ம் முதலாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை

சினோபார்ம் இரண்டாவது டோஸ் – 01

ஸ்புட்னிக் வி முதலாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை

ஸ்புட்னிக் வி இரண்டாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை

பைசர் முதலாவது டோஸ் – 16

பைசர் இரண்டாவது டோஸ் – 42

பைசர் மூன்றாவது (பூஸ்டர்) டோஸ் – 67

பைசர் நான்காவது (பூஸ்டர்) டோஸ் – 36

மொடர்னா முதலாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை

மொடர்னா இரண்டாவது டோஸ் – யாருக்கும் ஏற்றப்படவில்லை.

## காங்கேசன்துறை – தமிழக துறைமுகங்கள் இடையில் சரக்குக் கப்பல் சேவை ஆரம்பம்!

### பாதுகாப்பு அமைச்சு வழங்கியது அனுமதி

கொழும்பு, ஜூன் 28

காங்கேசன்துறைக்கும் தமிழக துறைமுகங்களுக்கு இடையில் சரக்கு கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைக்கும் தமிழகத்திலுள்ள துறைமுகங்களான காரைக்கால் துறைமுகம், புதுச்சேரி துறைமுகம் ஆகியவற்றுக்கு இடையே சரக்கு கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்கே இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சேவை இலங்கையர்களுக்கு எரிபொருள், உரம், பால் மற்றும் மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள உதவும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

## காஞ்சன விஜயசேகர கட்டாருக்கு பயணம்!



மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர நேற்று (திங்கட்கிழமை) கட்டார் சென்றார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தின் போது ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து இலங்கைக்கு எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான சாத்தியக்கூறுகள் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள இலங்கை தொழிலாளர்களுக்கான தொழில் வாய்ப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விஜயத்தில் சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட்டும் பங்கேற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## விவசாயிகளுக்கு வழங்கவிருக்கும் மண்ணெண்ணெயை பொது மக்களுக்கு பகிர்ந்தளிக்க முற்பட்டதால் குழப்பம்

யாழ்ப்பாணம்–அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் விவசாயிகளுக்கு விநியோகிக்க இருந்த மண்ணெண்ணெயை ஏனையவர்களுக்கு விநியோகிக்க இராணுவம் பதிவுகளை மேற்கொண்டமையால் அங்கு சிறிது நேரம் குழப்பம் ஏற்பட்டது.

விவசாயிகளுக்கு விநியோகிக்கவே மண்ணெண்ணெய் உள்ளது எனவும் ஏனையோருக்கு வழங்க முடியாது என்றும் பலர் கூறியபோதும் அதனைப் பொருட்படுத்தாது இராணுவத்தினர் பதிவுகளை தொடர்ந்தும் முன்னெடுத்தனர்.

இதனை அடுத்து மேற்படி விடயம் தொடர்பாக கோப்பாய் பிரதேச செயலருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பிரதேச செயலர் இராணுவத்தினருக்கு மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் தெளிவுபடுத்தினார்.

இதனைத் தொடர்ந்தும் பதிவு நடவடிக்கைகளை இராணுவத்தினர் இடைநிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## அங்கம்-48



**திம்பு தீர்மானமும் இந்திய ஒப்பந்தமும்**

இந்தியாவினால் ஜுலை – ஓகஸ்ட் 1985இல் ஏற்படுத்தப்பட்ட திம்பு மாநாட்டில் தமிழ் அரசியற் கட்சியாக தமிழர் விடுதலைக் கூட்டணியும் எல்லா விடுதலை குழுக்களும் (விடுதலைப்புலிகள் உட்பட) பங்களித்தன. அங்கு அவர்களுக்கு இந்தியா ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்தியது. தனி நாடான தமிழீழத்தை உருவாக்க உதவிகள், அனுசரணைகள் தர முடியாது என்பது தெளிவாகத் தெரிவிக்கப்பட்டது. அதற்கான காரணமாக பிராந்தியத்தின் வல்லரசுப் போட்டிகளும், இந்தியப் பிராந்தியத்தின் பாதுகாப்பும் கூறப்பட்டன. இந்தியாவின் அந்த நிலைப்பாடு மிகத் தெளிவாகவே தமிழ்ப் பார்ப்புகளுக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் தமிழ்த் தரப்புக்கள் எல்லாம் ஒன்றிணைந்து தங்களது மாற்று திட்டமாக நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தன. அவர்களது இனப்பிரச்சினைக்கு அந்த அடிப்படையில்தான் தீர்வு காணப்படவேண்டும் என அவர்கள் கோரினார்கள். அவர்களின் அந்த கோரிக்கைகள் திம்புத் தீர்மானமாக – கோட்பாடாக – இன்றும் அதன் அடிக்கல்லாக நிலைத்திருக்கிறது. அந்த நான்கு அம்சங்களும் வருமாறு:-

முதலாவது –

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.(Recognition of the Tamils a nation.) ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுமம் மொழி, அவர்களது வாழ்வு முறைகள், கலாச்சாரங்கள் மூலமாகவும் பிணைக்கப்பட்டு, கூடி வாழ்பவர்களாக இருப்பின் அவர்கள் தேசிய இனமாக கருதப்படுவார்கள். இன்றைய தேசாந்திர பயணங்களாலும் புலம்பெயர்வுகளாலும் தேசம் என்பது விரிவடைந்து, அவர்கள் பரந்து வாழ்ந்தாலும், தங்களது பிணைப்புகளால் விரும்பினால் தேசமாக இணைக்கப்பட்டுக் கருதப்படலாம். தமிழ் மக்கள் இப்படியான பிணைப்புகளாலும் வாழ்வு முறைகளாலும் ஒரு தேசிய இனமாகவே பார்க்கப்படுகின்றனர்.

இரண்டாவது –

தமிழ் மக்களுக்கான பாரம்பரிய பிரதேசங்கள் இலங்கையில் தமிழ் மக்களுக்கென உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல். (Recognition of the existence of an identified homeland for the Tamils of Ceylon)

மூன்றாவது –

தமிழ் தேசத்துக்கு சுயநிர்ணய உரிமை உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளுதல். (Recognition of the right of self determination of the Tamil nation.)

நான்காவது –

தமிழ் மக்களது குடியியல் உரிமைகளையும் சகல இலங்கைத் தமிழ் மக்களினதும் மனித உரிமைகளை அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளுதல்.(Recognition of the right of the citizenship and the fundamental rights of all Tamils of Ceylon)

– இவையே திம்புக் கோட்பாடுகளின் 4 அடிப்படை அம்சங்களாக முன் வைக்கப்பட்டன.

இலங்கை – இந்திய ஒப்பந்தம் ஜே. ஆரின் பேரினவாத தர்மங்களுக்கு எதிராக, இலங்கை பல்லின மக்கள் குழுமங்களைக் கொண்ட நாடு என ஏற்க வைத்து, வடக்கு – கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களது பாரம்பரிய பிரதேசங்கள் எனவும், அந்தப் பிரதேசங்கள் ஒன்றிணைக்கப்பட்டு ஒரு மாநிலமாக நிர்வகிக்கப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் தரப்பட வேண்டுமென சரத்துக்கள் ஆக்கப்பட்டன. இவை திம்பு கோரிக்கைகளின் முதலாவதும் இரண்டாவதும் கோரிக்கைகளையும்பெருமளவில்உள்ளடக்கியவை.

நான்காவது கோரிக்கை எழுவதற்கு அப்போது ஒரு மில்லியனுக்கு மேல் இந்திய வம்சாவளி தமிழர்கள் பிரஜாவுரிமை வழங்கப்படாமல் இருந்தார்கள். அவர்களுக்கு இது தரப்பட வேண்டும் என்பதிலும் தமிழ் மக்களுடைய மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதிலும் எழுந்தது இந்த நான்காவது கோரிக்கை.

இலங்கை– இந்திய ஒப்பந்தம் நாட்டில் பிரஜா உரிமைகள் இல்லாதிருந்த இந்திய வம்சாவளியினர் யாவருக்கும் பிரஜா உரிமை பெறுவதற்குத் தகுதி வழங்கியது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் அதன் பிரஜைகள்கள் யாவருக்கும் – தமிழ் மக்கள் உட்பட – மனித உரிமைகள் உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளன என்று கூறி அதனை சர்வதேசத்துக்கும் அரசு படம் பிடித்து காட்டியது. ஆனால் நடைமுறைகளோ வேறு.

1971 இல் ஜே.வி.பி. நடத்திய ஆயுதக் கிளர்ச்சியிலும், பின்னர் அவர்கள் 1987 – 1989 காலப் பகுதியில் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்துச் செய்த இரண்டாம் கிளர்ச்சியிலும் ஸ்ரீலங்கா இராணுவம் அவர்களது சொந்த சிங்கள இளைஞர்களை, மனித உரிமைகள் பற்றி எதுவித அக்கறையும் இல்லாமல் கொன்று குவித்தது. நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என வந்தபோது தங்களது இன சகோதரர்களையே தயவு தாட்சண்யமின்றி கொன்றவர்கள், நாட்டின் இறைமைக்கு தமிழ் மக்கள் சவால்கள் தருகிறார்கள், இவர்களை ஒரு கை பார்க்க வேண்டும் என்ற மனோபாவம் வளர்ந்த நிலையில், தமிழ் மக்களின் மனித உரிமைகளை திம்பு நாள்களிலும் மதிக்கவில்லை.

**சுயநிர்ணயம்**

ஆனால் மூன்றாவது கோரிக்கையை ஒட்டித்தான் தமிழ் மக்களுக்கு எதிராக நடந்த மனித உரிமை மீறல்களில் தமிழ் அரசியல் கட்சிகள் இன்றும் அரசியல் செய்கின்றன. சர்வதேச குடியியல், அரசியல் உரிமைகள் பற்றிய சாசனங்களின் படி (International Covenant on Civil and Political Rights) தங்களை ஒரு தேசமாக நிரூபித்துக் கொள்ளக் கூடிய மக்கள் குழுமத்துக்கு சுயநிர்ணய உரிமைகள் கோரத் தகுதி உண்டு எனச் சொல்கிறது. ஸ்ரீலங்காவில் உள்ள தமிழ் மக்களின் பாரம்பரியம், மொழி, வாழ்வு முறைகளினாலும், அவர்களது சர்வதேச ஈடுபாடுகளினாலும், தாங்கள் எங்கிருந்தாலும் தாங்கள் ஒரு தேசமாக வாழவேண்டுமென்ற குறிக்கோள் கொண்டமையாலும் அவர்களுக்கு சுயநிர்ணய உரிமை கோரத் தகுதிகள் உண்டு. ஆனால் சுயநிர்ணய உரிமை என்பது தத்துவத்திலும் நடைமுறைகளிலும் பெரு நதிகள். ஒவ்வொரு சுயநிர்ணயக் கோரிக்கையும் தனித்துவமானது. ஆகவே ஒரு பகுதியினருக்கு அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணயம் மற்றவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படும் என்பதல்ல.

அதனை உள்ளக சுயநிர்ணய உரிமை, வெளிப்புற சுயநிர்ணய உரிமை எனவும் பார்க்கிறோம். தமிழ்மக்களது எவ்வளவோ பேச்சுவார்த்தைகளில் ஸ்ரீலங்கா அடம்பிடித்து உள்ளக சுய நிர்ணய உரிமையைக் கூட மறுத்ததால், தமிழ் மக்கள் வெளிப்புற சுயநிர்ணயத்திற்கு இந்தியாவின் ஆதரவை நாடி நின்றனர். அந்த வெளிப்புற சுயநிர்ணயத்திற்கு முதல்படியாக இலங்கை – இந்திய ஒப்பந்தம் அமைந்தது. அதனூடாகத் தேசமாக வளர்ச்சி பெற்று, தன்னிறைவு கொண்டு, அதற்கு மேலும் ஸ்ரீலங்கா ஏற்றுக்கொள்ளக் கூடிய முறைகளில் அதிகாரப் பரவல்களையோ, நிர்வாக கட்டமைப்புகளையோ கோரி, அவை ஏற்காவிடில் சர்வதேச அனுசரணையுடன் சுயநிர்ணய உரிமைகளைக் கோரலாம். இவற்றுக்காக தமிழ் மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் மன்றில் ஆதரவு தேடுகிறார்கள். சர்வதேச புவியியல் நிலைகளுக்கேற்ப நகரும் அந்தக் காலத்தை கேட்டு கூறமுடியாது.

இருக்கும் இடைக்காலங்களில் தன்னிறைவை நோக்கி முன்னேற 'தமிழ் மக்கள் அவர்களுக்கு ஒப்பந்தத்தின் மூலம் இருப்பதைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்' என இந்தியாவின் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் அறிவுரை தருகிறார்.



(வளரும்)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழ்ப் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=